# திருமந்திரத்தில் கரு உருவாதல் சிந்தனைகள்

*முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பயோனியர் குமாரசுவாமி கல்லூரி, நாகர்கோவில்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6459

## முன்னுரை

சைவத் தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன இறைவனைப் புகழ்ந்து போற்றுவன தோத்திரங்கள் எனப்படும். திருமந்திரம் பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது இது ஒரு சாத்திர நூலாகும். திருமூரின் வரலாற்றினை பெரியபுராணத்தின் வாயிலாக அறியமுடிகிறது. “நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்” என்று சுந்திரமூர்த்தி நாயனார் குறிப்பிடுகிறார். திருமூலர் சிவாகமங்களில் வல்லவர், அட்டமாசித்து பெற்றவர். இவரின் காலம் பற்றி கணக்கிட அகச்சான்றுகள் எதுவுமில்லை. ஆனால் திருமந்திரத்தில்

**மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரன்**
**என்று இவர் என்னுடன் எண்மரும் ஆமே (திருமந்திரம் 50)**

எனும் பாடலால் நந்தியம் பெருமானிடம் திருமூலர் உபதேசம் கேட்டதாகவும் அவருடன் பதஞ்சலி, வியாக்கிரபாதரும் அடங்குவர் என்று கூறப்படுகிறது. பதினெண் சித்தர்களில் ஒருவராக திருமூலர் குறிப்பிடப்படுகிறார். திருமூலர் பாடிய பாடல்கள் மூவாயிரம் என்பர் அவை 283 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல்வேறு முக்கியமான கருத்துக்கள் அடங்கி இருந்தாலும் இக்கட்டுரை திருமூலர் கரு உருவாகும் சிந்தனை பற்றி கூறியுள்ள கருத்துக்கள் எடுத்துரைக்கப் படுகின்றது. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது. திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் இடம் பெறுவது இப்பகுதி ஆகும். இப்பகுதியில் நாற்பது மந்திரங்கள் உள்ளன. உயிர்கள் தான் செய்த வினைப்பயனுக்கேற்ப மறுபிறவி எடுக்கும் என்பது இந்து மத நம்பிக்கை. உயிர் உடம்போடு வடிவம் கொள்ளும் போது இருவகையான உடம்பை எடுக்கும். அது தூல உடம்பு அல்லது பரு உடம்பு என்றும் சூச்சும உடம்பு அல்லது நுண்ணுடம்பு என்பர்.

## பத்து மாதக் கரு

தாயின் வயிற்றில் குழந்தையைக் கருவாக இறைவன் படைக்கிறான். அவளின் கர்ப்பப்பை ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்திற்கு மேல் இருக்கின்ற சுவாதிட்டானத்தில் உள்ளது. அங்கே தான் உதிரமும், உணவாகப் பயன்படும் நீரும் நிறைந்துள்ளன.

இறைவன் இங்கு உயிருக்கு விடைதருகிறான். புதனா சரீத்திலோ யாதனா சரீரத்திலோ இவை இன்றி தன்னிடமே பாராமல் நின்ற உயிரை அதன் அதன் வினைக்கு ஏற்ப தாயின் கருவறையில் வைத்து அது வளர்வதற்குரிய கால அளவாகப்பத்து மாதங்களையும் திருமூலர் கூறுகிறார்.

***அறிகின்ற மூலத்தின் அங்கி அப்பு***
***செய்கின்ற ஞானத்து செந்தாள் கொளுவிப்***
***பொறைநின்ற இன்வையார் போந்துரை நாடப்***
***பறிகின்ற பத்தெனும் பாரம் செய்தானே***
***(452 திருமந்திரம்)***

தாய் கருவை பத்து மாதங்கள் சுமக்கிறாள் அதன் பின் குழந்தை பிறக்கின்றன

**உயிர்களின் உற்பத்தி**

உயிர்கள் தான் செய்த வினை பயனுக்கு ஏற்ப மறுபிறவி எடுக்கும் என்பது ஆன்மீகம் ஆகும். உயிர் உடம்போடு வடிவம் கொள்ளும் போது இருவகையான உடம்பை எடுக்கும் அதனை தூல உடம்பு எனவும் சுக்கும உடம்பு என்று கூறுகிறோம்.

***மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து***
***ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்***
***ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்***
***இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்***
***மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்***
***ஈரிரு திங்களிற் பேரருள் பிழைத்தும்***
***அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்***
***ஆறு திங்களில் ஊரலர் பிழைத்தும்***
***ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்***
***எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்***
***ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்***
***தங்க தசமதி தாயொடு தான்படும்***
***துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்***
***(திருவாசகம்-போற்றித் திருஅகவல்-அடி:13-25)***

என்று குழந்தை கரு உருவாவதில் இருந்து பத்து மாதமாகி குழந்தை பிறக்கும் வரைபடும் சிக்கல்கள் குறித்து திருவாசகம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

கடலால் சூழப்பட்ட இப்பேருலகில் உருவத்தில் பெரிதாகிய யானை முதல் உருவத்தில் சிறியதாகிய எறும்பு ஈராக எல்லா பிறப்புகளிலும் பிறந்து இளைத்ததை “யானை முதலாக எறும்பு ஈராக” என்கிறார் உலகில் தோன்றிய அனைத்து உயிர்களும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வு வாழ்கின்றன. உண்பது, உறங்குவது, இன்பம் அனுபவிப்பது, இனவிருத்தி செய்வது போன்றவை இவை எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை மனிதன் மட்டும் இயற்கைக்கு மாறாகவும் முரண்பாடாகவும் பலச் செயல்களில் ஈடுபடுகிறான். இயற்கையோடு ஒத்து வாழும் விலங்கினங்களில் வாழ்நாட்களில் பெரிய முரண்பாடுகள் எதுவும் தோன்றுவதில்லை அவைகளுக்கு கொடிய நோய் தாக்கமும் கொடூரமான வகையில் மரணமோ நிகழ்வதில்லை இயற்கைக்கு முரணாக வாழும் மனிதர்களுக்கு வாழ்வு போராட்டமாக உள்ளது. பகுத்தறிவு படைத்த மனிதனுக்குக் கொடிய மரணங்களும் நிகழ்கின்றன. இதற்கு காரணம் யாது அறிய முடியவில்லை. அதனால் தான் இதனை முன்னோர்கள் முன்வினைப்பயன் என்றனர்.

**குழந்தையின் சாயல்**

ஆண், பெண் கூடுதலின்போது காமம் மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தை தாமத குணம் மிக்கவனாக இருப்பான். காமம் குறைந்திருந்தால் மகன் சத்துவ குணம் உள்ளவனாக இருப்பான். மிகுதலும், குறைதலுமின்றி சமமாக இருப்பின் “இராச தகுணம்” உள்ளவனாக இருப்பான். “தாமதகுணம்” என்பது மனிதத் தன்மையுடன் இருத்தல். “சத்துவம்” என்றால் “சாத்வீகம்” அதாவது இறைத்தன்மை மிக்க குழந்தை. “இராசதம்” என்றால் மனிதனாகவும், விலங்குத் தன்மை யோடும் இருத்தல் ஆகும். ஆண் பெண் கலவியில் ஏற்படும், காமத்தின் அளவும்,

அப்பொழுது ஆணின் உடம்பிலும், பெண்ணின் உடம்பிலும் நிகழும் மூச்சுக் காற்றின் இயக்கமும், வளரும் கருவைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகும்.

இந்த உயிர் இருக்கிறதே, இதுதான் செய்த வினைப்பயன்களுக்கு ஏற்றவாறு எத்தனை எத்தனைப் பிறப்புக்களை எடுத்து எடுத்து இறந்துள்ளது. ஒவ்வொரு முறையும் அது வருந்தி அலைந்து, மீண்டும் மீண்டும் பிறக்கிறது. அப்படிப் பிறக்கும்போது தாய் தந்தை இருவரின் சாயலில், கருவில் உருவாகும்.

***ஏய்அம் அலந்த இருவர்தம் சாயத்துப்***
***பாயும் கருவும் உருவாம் எனப்பல***
***காயம் கலந்தது காணப் பதிந்தபின்***
***மாயம் கலந்த மனோலயம் ஆனதே!***
***(459- திருமந்திரம்)***

அதற்கு “மாயம் கலந்த மனோலயம்” எனப் பெயரிடுகிறார் திருமூலர் கரு உருவாகும் போது மனமும் உருவாகிறது. அது மாயம் கலந்த மனம். அதனையே “மனோமய கோசம்” என்கிறார்.

### அன்னையும், தந்தையும் போலவே குழந்தை

கருப்பையில் மாண்புடன் வளர்கின்ற கருவை ஆண், பெண், அலியென வடிவமைப்பவன் இறைவன். ஆண், பெண், அலி என்பவை அச்சுக்கள். அந்த அச்சின் வடிவம் என்பது தாய் தந்தையரைப் போலவே இருக்கும். தாயைப் போன்று பிள்ளை என்பதால் பெரும்பாலும் குழந்தைகள் தாயின் உடம்பையும், தந்தையின் உணர் வினையும் பெற்றிருக்கும்.

***மாண்பது வாக வளர்க்கின்ற வன்னியும்***
***காண்புது ஆண்பெண் அலியெனுங் கற்பனை***
***பூண்பது மாதா பிதா வழி போலவே***
***ஆம்பதி செய்தான் அச்சோதிதன் ஆண்மையே***
***(477- திருமந்திரம்)***

தாயின் சுரோணிதமும், தந்தையின் சுக்கிலமும் சேர்ந்த தன்மையை “வன்னி” என்கிறார். ஆண், பெண், அலி எனும் கற்பனை என்பது அச்சு, அதாவது அடிப்படை வடிவம் அந்த வடிவம் அமைப்பவன் இறைவன் என்று திருமூலர் கூறுகிறார்.

*(*அலி என்ற வார்த்தை திருமூலர் வார்த்தை அது அப்படியே பயன் படுத்தப்படுகிறது)*

### எண் சாண் உடம்பு

கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பங்களை ஆணும், பெண்ணும் ஒருங்கே அனுபவித்து, தங்களை மறந்த நிலையில் தந்தையின் விந்து தோன்றும் நரம்பு வழியாக, வெளியே வரும் விந்துவும், தாயின் செந்நீராகிய சுரோணிதம் தோன்றும் நரம்பு வழியாக, வெளியே வரும் சுரோணிதமும் கலக்கின்றன. அவ்வாறு இரண்டறக் கலக்கும் போது தாயின் பன்னிரண்டு அங்குல மூச்சுக் காற்றில் நான்கு அங்குலம் வெளியே போக, எட்டு அங்குலம் காற்று உள்வரும். அந்த எட்டு அங்குலத்தில் நான்கு அங்குலமே இந்த விந்து, சுரோணித கலப்பில் உட்புகும். அப்படி உட்புகும்போது உருவாகும் கருவின் கையளவில் எண்சாண் உடன்பினதாக அது உருப்பெற்று குழந்தை வளருகிறது.

***“சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்***
***ஆக்கிரமத்தே தோன்றும் அவ்யோனியும்***
***புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால்விரல்***
***ஆக்கரம் எட்டும் எண் சாணதுவே”***
***(464- திருமந்திரம்)***

ஒரு கரு உருவாகும் போதே அதனுடைய உயரமும் கணிக்கப்படுகிறது.

### பிறக்கும் குழந்தை ஆண், பெண் ஆகின்ற முறைமை

பிறக்கும் குழந்தை ஆணாகவும், பெண்ணாகவும் எப்படிப் பிறக்கிறது ஒரு குழந்தை ஆணாகவும், பெண்ணாகவும் பிறக்க காரணம் இறைவனே. தந்தையும், தாயும் கருவிகளே. ஓர் ஆணும், பெண்ணும் கலவியில் ஈடுபட்டுத் தங்களை மறந்து இணையும் போது, ஆணிலிருந்து உச்சகட்ட உணர்ச்சியின்போது வெண்துளியாகிய

விந்து வெளிப்படும். இந்த விந்துவில் ஆண் குழந்தை பிறப்பதற்கும், பெண் குழந்தை பிறப்பதற்கும் காரணமாக கூறுகள் உள்ளன. அதனை x, y எனக் குறிப்பிடலாம். அது போல பெண்ணின் சுரோணிதத்தில் x, x என்ற ஒன்றுபட்ட கூறுகளே உள்ளன. உடலுறவின் போது ஆணின் விந்து மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தை ஆணாக பிறக்கும். பெண்ணின் சுரோணிதமாகிய செந்துளி மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தைப் பெண்ணாக இருக்கும். இரண்டும் சமநிலையில் இருந்தால் பிறக்கும் குழந்தை அலியாகப் பிறக்கும். கருவுறும் நேரத்தில் ஆணின் விந்தில் உயிராற்றல் அதிகம் இருப்பின், பிறக்கும் குழந்தை ஆற்றல் மிக்கதாக அமையும்அவ்வாறின்றி பெண்ணிடமிருந்து மிகுந்திருக்கும் சுரோணிதமாகிய செந்து ளியில் அழிக்கும் ஆற்றல் அதிகம் இருப்பின் கரு, பயனற்றுப் போக்கும்.[1]

கருவுறும் சமயம் ஆணின் வலது மூக்குத்துவாரம் வழியே (சூரியகலையில்) சுவாசம் ஓடினால் ஆண் விந்து அதிகம் வந்து. விந்தணுவிலுள்ள XY என்ற இரு கூறுகளில் "Y" மட்டும் பெண்ணின் நாதமாகிய "X" உடன் கூடுவதால் XY ஆணாகிறது. தந்தையாகிய ஆணின் இடது மூக்குத்து வாரம் வழியே (சந்திர கலையில்) சுவாசம் ஓடினால் ஆண் விந்தணுவிலுள்ள XY என்ற இரு கூடுகளில் X மட்டும் பெண்ணின் நாதமாகிய X உடன் கூடி XX பெண்ணாகிறது.[2] அறிவியல் அறிஞர்கள் வியக்கும் பேருண்மை இது ஆகும். இதனை திருமூலர்

> **ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்**
> **புணிரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்**
> **தான்மிகு மாகில் தரணி முழுதாளும்**
> **பாணவம் மிக்கிடில் பாய்ந்தும் இல்லையே**
> ***(478- திருமந்திரம்)***

இப்பாடல் வாயிலாக விளக்குகிறார். இங்கு "பாழ்நவம்" என்பதே பாணவம். அதாவது அழிக்கும் சக்தி அதிகம் இருப்பின் கரு உற்பத்தி இல்லை.

**குழந்தையின் ஆயுட்காலம்**

ஓர் ஆணும், பெண்ணும் உடலுறவில் கூடுவது என்பது இன்ப நுகர்ச்சிக்கா அல்லது நல்ல இளம் தழைக்கவா என்ற வினா எழுகிறது. ஆணும், பெண்ணும் ஒருவரோடு ஒருவர் கூடி மகிழும் போது ஏற்படும் உச்சக் கட்டத்தில் தான் ஆணின் விந்து வெளிவருகிறது. அப்படி வரும்போது நம்மை மறந்த, அனுபவித்து அறியாத ஓர் இன்பநிலை உடலில் தோன்றுவது இயற்கையே. இங்கே, ஆணும், பெண்ணும் அந்த இன்பத்திற்காக கூடுகிறோம் என்ற மனநிலையின்றி, நம் சந்ததி தழைப்பதற்காகவே கூடுகிறோம் என்ற உணர்வில் கூட வேண்டும். அப்படி கூடி, ஆணின் விந்து வெளிப்பட்ட பிறகு அந்த ஆண், உடனடியாக அந்த பெண்ணை விட்டு நீங்கி விடக்கூடாது. அவன் தன்னை மறந்த நிலையில் அவளோடு ஐந்து மூச்சு நிகழும் வரை பிணைந்திருப் பானாயின், பிறக்கும் குழந்தை நூற்றாண்டுகள் வாழும். நான்கு மூச்சுகள் பிணைந்திருப் பானாயின் எண்பதாண்டுகள் வாழும் இதனை நுட்பமாக கணிக்கிறார் திருமூலர்.

> **பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்**
> **பாய்ந்தபின் நான்கோடில் பாரினில் எண்பதாம்**
> **பாய்நதிடும் வாயு பகுத்தறிந்தவ் வகை**
> **பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே**
> ***(479- திருமந்திரம்)***

சுக்கிலமாகிய விந்து கருப்பையில் சேர்ந்த பிறகு ஐந்து மாத்திரைப் பொழுது பிராண வாயு ஓடுதல் என்பது, எல்லாருக்கும் நிகழ முடியாது. அதுதான் ஆண்டவன் அருள் என்பது. இங்கே எந்த விஞ்ஞானமும், மருத்துவமும் வேலை செய்யமுடியாது. வெளிக்காற்றை ஒருமுறை உள்ளே வாங்கிச் சிறது நிறுத்திப் பின் வெளியே செல்லவிடுத்து மீண்டும் அவ்வழியே வாங்கி உள்ளே நிறுத்துதல் ஒரு மூச்சு எனப்படும் நிறுத்து தலை "கும்பகம்" சுழற்சி என்பர். இன்னும் சில சித்தர்கள் இந்த ஒரு சுழற்சியைப் பற்றிச் சொல்லும் போது, வலது நாசி வழியே உள் வாங்கி, நிறுத்தி, பின் இடது

நாசி வழியே வெளியேற்றி, பின் உள் இழுத்து நிறுத்தி, அதன் பின்பு வலது நாசி வழியே வெளியேற்றுவது ஒரு மூச்சுச் சுழற்சி என்பர்.

இதனை திருமூலர்,

**"பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந்திவ் வகை**
**பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே**
***(479- திருமந்திரம்)***

என்கிறார். இப்படி மூச்சுக் காற்றை வசப்படுத்துகின்ற ஆற்றல், யோகப் பயிற்சி தினமும் செய்பவர்களால் மட்டுமே முடியும்.

***மாற்றுத் திறனாளி குழந்தைகள்***

குழந்தை பிறப்பு பற்றி ஔவையார் இப்படி பாடுகிறார். மானிட பிறப்பு சிறப்பு உடையதாக இருக்கவேண்டும் அவ்வாறு இருந்தால்தான் சிறப்பு

**அரிதரிது மானிடர் ஆதல் அரிது**
**மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு**
**பேடுநீங்கிப் பிறத்தல் அரிது.**
**(ஔவையார்)**

"கருவுறும்" நேரம் என்பது மிகமிக முக்கியமானது. தந்தையின் சுவாசம் இயல்பை விடக் குறைவாக இருந்தால் பிற்கின்ற குழந்தை குட்டையாகப் பிறக்கும். தந்தையின் சுவாசக்காற்று வலிமை இழந்து மெதுவாக இருந்தால் பிறக்கின்ற குழநதை வலிமை இல்லாமல் கை, கால், உடல் உறுப்புகள் வலிமை குன்றி ஊனமாகப் பிறக்கும். ஆணும், பெண்ணும் இணையும் போது, ஆணுக்கு மூச்சுக் காற்றுத் தடைப்பட்டு, மூச்சு திணலுடன் கூடிய சுவாசம் இருப்பின் கருவுறும்போது, அக்குழந்தை கூனாக அமைந்து பிறக்க வாய்ப்பு உண்டு. எனவே ஒரு குழந்தை நல்ல குழந்தையாகப் பிறக்க ஆணுக்கே அதிகப் பொறுப்பு உண்டு.

**பாய்கின்ற வாயு குறையின் குறளாகும்**
**பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்**
**பாய்கின்ற வாயு மாதர்க்கில்லைப் பார்க்கிலே!**
***(480- திருமந்திரம்)***

ஒரு நல்ல தலைமுறையை உருவாக்கும் பொறுப்பு ஆண் மகனுக்கே உண்டு. பொதுவாக யோக நூல்கள் சுவாசத்தின் நீளம் 12 அங்குலம் என்கின்றன. பிராணயாமப் பயிற்சியின் மூலம் சுவாசத்தின் நீளத்ததை குறையாமல் வைத்துக் கொள்ளலாம்! எனவே பிராணாயமப் பயிற்சியும், மனத்திற்கு அமைதியைத் தரும் சிவயோகப் பயிற்சியும் இளம் வயதிலிருந்தே அனைவரும் பெற வேண்டும். பொதுவாக ஆணும், பெண்ணும் கூடும்போது, அகமும் புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். நல்ல காற்றோட்டமான அறை. மெல்லிய ஒளி இனிய நறுமணம். இதமான காற்று.. மிக மிகத் தேவை. உடலும் தூய்மையாக இருக்க வேண்டும். எப்படி ஆணின் சுவாசக் காற்று மிக முக்கியமோ, அதுபோல பெண்ணின் உடல் சுத்தமும் முக்கியமாகிறது.

**மாதா உதரம் மலம் மிகில் மந்தனாம்**
**மாதா உதரம் சலம் மிகல் மூங்கையாம்**
**மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதரத்தில் வந்த குழவிக்கே**
***(481- திருமந்திரம்)***

குறிப்பாகத் தாயின் வயிற்றில் மலமும், நீரும் தங்கியிருக்கக் கூடாது. உடல் சேர்க்கைக்கு முன் நன்றாக மலம் கழித்து, சிறுநீர் கழித்து, மிகவும் சுத்தமாகத் தாய் இருத்தல் மிக மிக முக்கியம். தாயின் வயிற்றில் மலம் நீங்காதுதங்கியிருந்தால், அந்த சூழ்நிலையில் கருவுறுதல் நிகழ்ந்தால், பிறக்கும் குழந்தை மந்த புத்தி உள்ளதாகப் பிறக்கும். சிறுநீர் கழிக்காமல் பெண் ஆணுடன் சேரும்போது குழந்தை ஊமையாகப் பிறக்கும். மலம், நீர் இரண்டும் பெண்ணிடம் தங்கியிருந்தால், பிறக்கும் குழந்தைக்குப் பார்வைக் குறைவு ஏற்படும்.

எனவே, "கர்ப்பம் தரித்தல்" என்பது மிக முக்கியமாக நடைபெறும் செயல். நூறாண்டு காலம் வாழும் ஓர் உயிரைத் தாய் தன் கருப்பையில் சுமக்கத் தொடங்கும் தருணம். எனவே, ஆண், பெண், இருவரும் இதைக் கருத்தில் கொண்டு சேர்க்கையில் ஈடுபட வேண்டும்.

**ஆண், பெண், இரட்டைக் குழந்தைகள், அலிப்பிள்ளை**

திருமூலர், ஆணின் மூச்சுக் காற்றே, குழந்தைகளின் பிறப்புக்கு, வகைக்கு அடிப்படையாக அமைகிறது என்றார். திருமூலர். ஆணின் மூச்சுக்காற்று வலப்பக்கம் வழியே சென்றால் ஆண் பிறப்பான். இடப்பக்கம் வழியே சென்றால் பெண் பிறப்பாள். உடலுறவின்போது அபானனாகிய காற்று கீழே போகாமல் மேலே எதிர்த்தால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். இருவரும் இடப்பக்க மூச்சுக்காற்றும், வலப்பக்க மூச்சுக்காற்றும் சமமாக இருப்பின் பிறக்கும் குழந்தை அலியாக பிறக்கும் என்கிறார்.

**குழவியும் ஆணாம் வலத்தது வாகில்**
**குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்**
**குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்**
**குழவி அலியாகும் கொண்ட கால் ஒக்கிலே**
***(482- திருமந்திரம்)***

**அழகான குழந்தையும், கருச்சிதைவும்**

தந்தையிடம் இருப்பது உயிர்ச்சத்து அணு. அதுவே விந்து. அதுவே சுக்கிலம். இந்த சுக்கிலம் தாயின் சுரோணிதத்துடன் சேர்ந்து நீந்தி கருவறையில் நிற்றலே கருவுறுதல் ஆகும். இப்படி கருவுறுதல் நிகழும்போது தாய், தந்தையர் இருவருக்கும் சுவாசம் இடம், வலம் என்று சீராக இயங்க வேண்டும். அப்பொழுதுதான் பிராண வாயு போதிய அளவில் கிடைக்கும். இதுவே நலமான குழந்தை பிறக்க வழிவகுக்கும். குழந்தை ஆணாகவோ, பெண்ணாகவோ பிறப்பதற்கு தந்தையின் மூச்சுக் காற்று முக்கியம். அதை ஒத்து தாயின் மூச்சுக் காற்று அமைந்தான் தான் குழந்தை அழகாகப் பிறக்கும். தாயின் மூச்சுக் காற்று மாறியும், குழறியும், தடுமாறியும் இயங்கினால் கருச்சிதைவு ஏற்படும் இதனை திருமூலர் கீழ்க்கண்ட பாடல் வாயிலாக கூறுகிறார்.

**கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்**
**கொண்ட குழவியும் கோமளமாயிடும்**
**கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்**
**கொண்டதும் இல்லையாம் கோல் வளையாட்கே**
***(483-திருமந்திரம்)***

**நிறைவுரை**

கரு தாயின் வயிற்றில் ஒரு கரு பத்து மாதங்கள் வளர்கிறது. அது ஆணா, பெண்ணா, அலியா, இரட்டைக் குழைந்தைகளா, ஊனமுற்றதா, மந்த புத்தியா, பிண்டமாகிய ஊன் தடிமனா, ஆற்றலான பிள்ளையா, இது யாருக்கும் தெரியாது. தாயின் கருப்பையில் கரு உருவாவதற்குக் காரணமான தந்தையும் அறியவில்லை. தாயும் அறியவில்லை கருப்பையில் அது தெரியாது. தான் கருவுற்றதையோ, குழந்தையின் அமைப்பையோ தாய் கண் கொண்டு பார்க்கமுடியாது. ஆனால் இவை அனைத்தையும் படைத்த கடவுள் மட்டுமே உணர்வான். அவன், அந்த பரம்பொருள், உயிரோடு தான் இருக்கிறான். கூடவே இருக்கிறான். ஆனால், மெய்ப்பொருள் அவனுக்கு மட்டுமே தெரியும் இந்த மாயை என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிக் பார்க்க பார்க்க வியப்பே மேலிடுகிறது என்கிறார் திருமூலர். இன்றைய விஞ்ஞான அறிவியல் துறை ஆச்சரியபடும் அளவிற்கு நுட்பமானக் கருத்துக்களை திருமூலர் கூறியுள்ளார். இது பிறப்பின் இரகசியம் ஆகும். இன்று நவீன மருத்துவத்தில் ஊடு கதிர் (sean) மூலமாக கரு உருவான நாற்பத்தைந்தாம் நாள் முதல் தொடர்ந்து மாதாமாதம் ஊடு கதிரை உட்செலுத்தி குழந்தை நலமாக வளருகிறதா என்று மருத்துவர்கள் கண்காணித்துக் கொண்டே இருக்கின்றனர். முந்தைய காலத்தில் இந்த கருவிகள் எதுவும் இல்லாமலேயே குழந்தைப் பிறப்பு நடை பெற்றது என்பதனை மனதில் கொள்ளவேண்டியுள்ளது. நவீன மருத்துவம் எதிர்கொள்ளும் பல பிரச்சி னைகளுக்கு திருமூலர் விடைதருகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சித்தர்கள் எவ்வளவு ஞானம் படைத்தவர்கள்

என்பதற்கு திருமூலரின் பாடல்களே சான்றாகும். ஒரு உயிர் பிறப்பில் இவ்வளவு ஆச்சரியங்கள் நிறைந்திருப்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும். இன்றைய காலகட்டத்தில் பலரும் குழந்தை பிறப்பிற்காக ஏங்குகின்றனர். திருமூலர் கூறும் வழிமுறைகளை பின்பற்றினால் நல்ல குழந்தைகள் பிறக்கும் என்பதில் ஐயமில்லை. ஏன் எனில் திருமூலர் ஒரு மருத்துவரும் ஆவார். இன்று நாம் அனைவரும் தமிழ் மருத்துவமுறையை மறந்து அலோபதி மருத்துவ முறையை பின்பற்றுகிறோம். தமிழர்களாகிய நாம் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவ முறையை வாழ்வோடு இணைத்து க்கொண்டால் நல்ல ஆரோக்கியத்தோடு வாழலாம் உணவே மருந்து என்பதே தமிழரின் மருத்துவ முறையாகும்.


1. மூலநூல்- திருமூலர் - திருமந்திரம் (உ. ஆ. M. நாராயணவேலுப்பிள்ளை) வர்த்தமானன்பதிப்பகம்,141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை,.
2. மாணிக்கவாசகர், திருவாசகம் - போற்றித்திரு அகவல் (உ.ஆ.M. நாராயண வேலுப்பிள்ளை) வர்த்தமானன் பதிப்பகம்,141, உஸ்மான் சாலை, தியாகராய நகா,˙ சென்னை.
3. அடிக்குறிப்பு
4. சண்முகையா. ஆ. திருமந்திர தமிழ் அமுதம், ராஜகோகிலா அறக்கட்டளை, 40, வல்லன்குமாரவிளை, நாகர்கோவில்.
5. மேற்படி